**18.03.2024**
***OS 145/2021***
**வா.சா.1 முத்துராஜா**
**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ள நபர் யாரென்றால் யாரும் வரவில்லை. நான் மட்டும்தான் வந்துள்ளேன். இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி-சுப்பையா என்ன ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் ஆட்சேபனை செய்துள்ள விவரம் தெரியும், என்ன ஆட்சேபனை செய்துள்ளார் என்ற விவரம் சரியாக தெரியவில்லை. வழக்கு சொத்தை பொறுத்து 3ம் பிரதிவாதி பெயரில் 17.08.1994ல் கிரைய பத்திரம் உள்ளது என்றால் அதைப்பற்றி தெரியவில்லை. மேற்படி சாட்சியிடம் கிரைய பத்திரம் காண்பித்து கேட்கப்பட்டது. வழக்கறிஞருக்குத்தான் தெரியும் என்று சொல்கிறார். வழக்கு சொத்தை பொறுத்து 1/4 பாகம் என்பது எனக்கும், நாகேந்திரன், சிவபெருமாள் ஆகியோர்களுக்கு மட்டும்தான் கோரியுள்ளேன். 1/4 பாகம் வழக்குரையில் கோரியுள்ளேன் என்றால் இல்லை. என்னுடன் சேர்த்து 1/3 பாகம்தான் கோரியுள்ளேன். அதனால் வழக்கு சொத்தை பொறுத்து 1/4 பாகம் நான் கேட்டு நான் வழக்கும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். சுப்பையாவிற்கு எவ்வித பாகமும் கிடையாது. அவர் பெயர் கூட்டுபட்டாவில் உள்ளதால் தாக்கல் செய்துள்ளேன். கூட்டுபட்டா பட்டா எண்.164 என்பது சின்னபெருமாள் மற்றும் 3ம் பிரதிவாதி-சுப்பையா பெயரில் உள்ளது என்றால் சரிதான். 5ஏக்கர் 75 செண்டில் 35செண்ட் வாய்காலுக்காக அரசாங்கம் ஆர்ஜிதம் செய்துவிட்டது என்றால் தெரியாது. அதுபோக மீதமுள்ள 5 ஏக்கர் 40 செண்டை 3ம் பிரதிவாதி சின்னபெருமாளிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அவர் புல எண்.22/5B-ஐ வாங்கியுள்ளார். 07.02.1994ம் சின்னபெருமாளும், 3ம் பிரதிவாதியும் செய்துகொண்ட பதிவு பெற்ற கிரைய ஒப்பந்தம் வழக்கு சொத்தை பொறுத்துதான் என்றால் சரிதான். நான் என்னுடைய பிராதிலும், முதல்விசாரணைவாக்குமூலத்திலும் சின்னபெருமாளிடமிருந்து 3ம் பிரதிவாதி கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக்கொண்ட புல எண்.22/5A-ஐ விட்டுவிட்டு புல எண்.22/5B-ஐ வாங்கியுள்ளார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 17.08.1994ல் சின்னபெருமாள், 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் 35செண்ட் வாய்காலுக்காக அரசாங்கம் ஆர்ஜிதம் செய்ததுபோக மீதி உள்ள ஏக்கர்-5 40செண்ட் புல எண்.22/5A என்றுதான் கண்டுள்ளது என்றால் சரிதான், அவ்வாறுதான் எழுதியுள்ளது. மேற்படி 17.08.1994ம் தேதிய கிரைய பத்திரம்

ஆவண எண்.1931/1994 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சின்னபெருமாளிடம் ஆர்ஜிதம் செய்தது போக 5-ஏக்கர் 40செண்ட் கிரையம் பெற்றிருந்தாலும் சின்னபெருமாள் மொத்த சொத்தையும் கிரையம் செய்யவில்லை என்பதால்தான் சின்னபெருமாள் பெயரிலும் 3ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதை மறுக்கிறேன். மொத்தம் 84 செண்ட் சின்னபெருமாள் பெயரிலும் சுப்பையா பெயரிலும் உள்ளது என்று சாட்சி சொல்கிறார். பட்டா எண்.164 புல எண்.22/5A 2.32.5ஹெக்டேர்ஸ் பட்டா பாஸ்புத்தகத்தில் உள்ளது என்றால் கிராம கணக்கில் அவ்வாறு இல்லை. வா.சா.ஆ.4ல் புல எண்.22/5A-ல் 5-ஏக்கர் 75செண்ட் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 புலவரைபடிக்கு புல எண்.22/5A-ல் 5-ஏக்கர் 75செண்ட் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான், 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை அனுபவிப்பதற்கு எவ்வித ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்தின் சுவாதீனம் எங்களிடத்தில்தான் உள்ளது. சொத்தை பங்கு பிரிக்கவில்லை என்பதால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. புல எண்.22/5A-ல் உள்ள சொத்திற்கு 3ம் பிரதிவாதி பெயரில் போர்வெல்லுக்கு அவருடைய பெயரில் 29.08.2005ல் மின்இணைப்பு பெற்றுள்ளார் அந்த போர்வெல் புல எண்.22/5B-ல் உள்ளது. புல எண்.22/5B-ன் விஸ்தீரணம் 2ஏக்கர் 40 செண்டாகும். அது சுப்பையா பெயரில் தனி பட்டாவாக உள்ளது. மின்சார வாரியத்திலிருந்து அனுப்பப்பட்ட 29.08.2005ல் மின்இணைப்பு புல எண்.22/5A-க்குதான் என்றால் அவ்வாறுதான் போடப்பட்டுள்ளது. என்னுடைய வழக்கின் பிராதிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் வழக்கு சொத்தான புல எண்.22/5A-க்கு நான்குபுறங்களிலும் 3ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தோ அல்லது குறிப்பாக புல எண்.22/5B-யோ உள்ளதாக சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்கின் பிராதில் வழக்கு சொத்தின் நான்குமாலை பற்றி சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. சின்னபெருமாள் விட்டுவிட்டு சென்ற வீடு மற்றும் சொத்துக்களை பிரித்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சின்னபெருமாளிடமிருந்து நான் பெற்ற சொத்துக்கள் பற்றியும் நாங்கள் அடைந்த சொத்துக்களையும் பற்றி சொல்லவில்லை என்றால் அந்த சொத்திற்குரிய பட்டா சின்னபெருமாள் பெயரில்தான் உள்ளது. இன்னும் பிரித்துக்கொள்ளவில்லை. அதனால் சின்னபெருமாள் பெயரில் உள்ள மற்ற சொத்துக்களை இந்த வழக்கின்

சொத்துவிபரத்தில் சொல்லப்படவில்லை என்றால் மனை சொத்துக்கள் உள்ளன. வழக்குரையில் விவரம் சொல்லப்பட்டுள்ளது. வழக்குரையில் இன்னென்ன சொத்துக்கள் உள்ளது என்றும், அவை இன்னும் பிரிவினை செய்யப்படவில்லை என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சின்னபெருமாளும், 3ம் பிரதிவாதியும் 07.02.1994ல் செய்துகொண்ட ஒப்பந்த பத்திரத்தை ஏன் ரத்து செய்துகொள்ள வேண்டும் என்ற விவரத்தை நான் ஏன் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அந்த ஒப்பந்த பத்திரம் காலாவதி ஆகிவிட்டதால் சொல்லியுள்ளேன். சின்னபெருமாளும், 3ம் பிரதிவாதியும் 07.02.1994ல் செய்துகொண்ட ஒப்பந்த பத்திரம் சரியானது என்றால் சரிதான், ஆனால் ஒப்பந்த பத்திர காலத்திற்குள் அவர்கள் நிறைவேற்றிக்கொள்ளவில்லை. கார்த்திஸ்வரி என்பவர் சின்னபெருமாளின் சுவீகார மகள் என்று சொல்லி தன்னை வழக்கில் சேர்க்க சொல்லி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக கார்த்திஸ்வரி 31.05.2006ல் எழுதி வைத்ததாக சொல்லும் பதிவு பெற்ற உயிலையும் தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. அந்த உயிலில் இந்த வழக்கு சொத்து கிடையாது என்றால் அது பற்றி தெரியாது. அந்த உயிலில் 5இலக்கம் 1ஏக்கர் 71 செண்டில் உரிமைகோரி நான் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எந்த சொத்தை எழுதி வைத்துள்ளார் என்று தெரியவில்லை என்பதால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிர்வழக்குரையில் 17.08.1994ல் 5ஏக்கர் 40செண்டை 3ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்று ஆட்சேபனை தெரிவிந்திருந்த நிலையிலும் இதுவரை அது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து பி.வா.சா.ஆ.1 கிரைய தேதியிலிருந்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வரக்கூடிய சூழ்நிலையில் கூட்டுஅனுபவத்தில் இருப்பதாக குறிப்பிட்டு தவறான சட்டபிரிவின் கீழ் குறைவாக மதிப்பிட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்தில் யாருக்கு எவ்வளவு பாகம் என்று விவரம் தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானே சின்னபெருமாளுக்கு மற்ற சொத்துக்கள் இருப்பதாக சொல்லியுள்ள நிலையில் மற்ற சொத்துக்களை சேர்க்காமல் வழக்கு சொத்தை மட்டும் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எந்த காலமும் நான் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்தில் எப்போதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல, நாங்கள்தான் விவசாயம் செய்து வருகிறோம். என்னுடைய தவறான வழக்கிற்கு 1, 2 பிரதிவாதிகள்

உடன்படாததால்தான் ஒருதலைபட்சமாக உள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து நான் உரிமை கோருவதற்கோ, பாகம் கோருவதற்கோ சின்னபெருமாளும், 3ம் பிரதிவாதியும் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தை ஆட்சேபனை செய்யவோ உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நன்கு தெரிந்திருந்தும் அது தெரியாது என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்